தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 24, திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 ஜூலை 8, சனிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்”

வாய்மை என்று சொல்லப்படுவது எது என்றால், அது மற்ற உயிர்களுக்குத் தீங்கினைச் சிறிதும் உண்டாக்காத சொற்களைப் பேசுதல் ஆகும். (குறுக்கீடு)

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

கதிராமங்கலம் போராட்டம் தொடர்பாக முந்தையதினம் அவையில் மாண்புமிகு முதலமைச்சர் குறிப்பிட்ட ஒரு வார்த்தையை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போராட்டங்களைப் பற்றி விளக்கம் தருகிறபோது, சிலர் வேண்டுமென்றே, திட்டமிட்டு குழந்தைகள், பெரியவர்கள் என்று எல்லோரும் போராடுவது இப்போது ** குண்டர்களை வைத்துக்கொண்டு போராட்டங்களை நடத்துவது, அவர்கள் வேண்டுமென்றே, திட்டமிட்டு சதி செய்து கொண்டிருக்கிறார்கள்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

என்ற அடிப்படையிலே அவர் தன்னுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார். நான் தங்கள்மூலமாக கேட்க விரும்புவது, போராட்டம் என்பது அவரவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமை. நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது பல போராட்டங்களை நடத்தியது உண்டு. அதேபோல, நாங்களும் இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கிறபோது போராட்டங்களை நடத்துகிறோம். ஏற்கெனவே பல முறை எதிர்க்கட்சியாக இருந்த நேரங்களில் பல போராட்டங்களை நாங்களும் நடத்தியிருக்கிறோம். எனவே, நாம் மட்டுமல்ல; எத்தனையோ கட்சிகள், எத்தனையோ அமைப்புகள், அதாவது அரசியல்வாதிகளைக் கடந்து, இப்போது பொதுமக்கள், தாய்மார்கள், இளைஞர்கள், மாணவர்கள், ஏன் பள்ளிகளில் படிக்கக்கூடிய பிள்ளைகள், மாணவர்கள்கூட போராட்டத்திற்கு முன்வரக்கூடிய நிலையிலே இன்றைக்கு ஒரு சூழ்நிலை அமைந்திருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட போராட்டங்களை நடத்தக்கூடிய அந்த உரிமையை ** வகையிலே அது அமைந்துவிடும் என்கிற காரணத்தினால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நீங்கள் பேசுங்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ** என்று சொல்வது தவறு. நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: நானும் அதைத்தான் சொல்கிறேன். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. ஆகவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது, முதலில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் குறித்துப் பேசிய ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து முதலில் நீக்குகிறேன். (குறுக்கீடு) இருங்கள். எல்லாவற்றையும் நீக்குவதில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் போராட்டம் குறித்து ** என்று சொல்கிற வார்த்தை, அவர் தேவையில்லை என்று விரும்புகிறார். ஆகவே, மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 ஜூலை 8] [பேரவைத் தலைவர்]

முதலமைச்சர், அந்த வார்த்தை தேவையில்லை என்று விரும்புகிற காரணத்தினாலே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அவ்வளவுதான். போராட்டம் குறித்துப் பேசிய அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நான் சொன்னதையும் நீக்குகிறேன். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் உட்கார்ந்துகொண்டு சொல்வதும் அவைக் குறிப்பில் இருக்காது.

2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS